08.09.2021

Case No.OS. 154/2014

PW. 1 – பாணுமதி – குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1ம் பிரதிவாதி எனக்கு 5.2.2014 தேதி அறிவிப்பு கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு அளித்தேன் என்றால் சரிதான். சுமதி அளித்த அறிவிப்பினை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 27.2.2014 தேதி சுமதி ஆற்காடு நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்று சொன்னால் சரிதான். அதன்பின்னிட்டு ஆற்காடு மற்றும் ராணிபேட்டை சார்பு நீதிமன்றத்தில் கேவியட் மனுக்கள் தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். அதன்பின்னிட்டுதான் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். காங்கிரட் போடுவதால் தடைசெய்ய போட்டேன். வா.சா.ஆ.3 ஆவணமானது அப்ரூவல் ப்ளான் கிடையாது என்று சொன்னால் நாங்கள் கையெழுத்து வாங்கியுள்ளோம். வா.சா.ஆ.3 ல் கையெழுத்தில்லை என்று சொன்னால் சரிதான். கிராமங்களுக்கு அப்ரூவல் கொடுப்பதற்கு பிடிஓ தான் தகுதியான அதிகாரி என்று சொன்னால் சரிதான். அவரிடமிருந்து அப்ரூவல் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். வரி பெயர் மாற்றம் செய்வதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் வரி செலுத்தியுள்ளேன். வருவாய் துறை அதிகாரிகள் என் பெயரில் பட்டா மாற்றம் செய்ய மூல ஆவணங்கள் அல்லது சம்மந்தப்பட்ட நபர்களையோ விசாரணை செய்து பட்டா அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். முழுமையான விசாரணை நடைபெற்றதால்தான் உண்மை நிலவரம் தெரிவந்திருக்கும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து ஸ்ரீதருக்கு முழுமையாக பாத்தியப்பட்டதல்ல என்றும் ஸ்ரீதரின் சகோதரிகளை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் ஸ்ரீதரும், நானும் சேர்ந்து ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 29.10.2012 தேதியிட்ட கிரைய ஆவணம் மோசடியானது என்றும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை எழுதி கொடுப்பதற்கான முழு உரிமை ஸ்ரீதருக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. மோசடியாக பெறப்பட்ட பட்டாவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு விளம்புகை பரிகாரம் கூறி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

ஜானகிபதி நாய்டுவின் அனைத்து வாரிசுகளையும் சேர்த்தால்தான் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சரியான முறையில் சொத்தை மதிப்பீடு செய்யாமல் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.  தாவா பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.